தேதி: 07.02.2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண். சிசி.51/2017

வழக்கு சாட்சி எண். 8

பெயர்: தளவாய் ஜாதி :

தந்தை பெயர் : தொழில்:

கிராமம்: சமயம்:

தாலுகா: வயது:

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது வெள்ளுரில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன், கடந்த 2017 ம் வருடம் ஒரு நாள் காலை 9.00 மணிக்கு நான் மற்றும் ரமேஷ் இருவரும் பேருந்துக்காக பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டு இருந்தோம்.

2. அப்போது அங்கு வந்த காவல் துறையினர் நடந்த விபத்து சம்மந்தமாக வரைந்த வரைபடத்தில் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான் . பார்வை மகஜர் **அ.சா.ஆ. 4** ஆகும். அதில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்

குறுக்கு விசாரணை.

2. விபத்தில் இறந்து போனவர் எனக்கு என்ன உறவு முறை என்றால்எனது தம்பி மகன் ஆவார். நான் ஒரு கையெழுத்து போட்ட பேப்பரை நான் படித்து பார்த்தேன் என்பதால் பேருந்து நிறுத்தம் சம்பவம் நடந்த இடத்தில் இருந்து எவ்வளவு தூரம் உள்ளது என்றால் 10 அடி தூரம் ஆகும்.

3. ஒரு பாலம் இருந்ததாக மகஜரில் சொல்லப்படுவதில் அந்த பாலத்தின் எண் என்னவென்றால் நான் கவனிக்கவில்லை. பார்வை மகஜரில் குறிப்பிட்டுள்ள ஒரு மின்விளக்கு எண் என்ன வென்று குறிப்பிட்டு இருந்தார்கள் என்றால் அதை நான் கவனிக்கவில்லை.

4. மண் தடம் எவ்வளவு தூரத்தில் இருந்தது என்றால் 20 அடி தூரத்தில் இருக்கும். நான் பார்க்கும் போது 20 அடி தூரத்தில் இருக்கும். நான் நிறைய விசயத்தை கவனிக்கவில்லை என்று சொன்னதற்கான காரணம் என்ன வென்றால் நான் வெள்ளைப்பேப்பரில் கையொப்பம் செய்ததால் தான் அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எழுதிய பேப்பரில் தான் கையொப்பம் செய்தேன்.

மறு விசாரணை இல்லை

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /-
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.

தேதி: 07.02.2023

வாக்குமூலம்
குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்
வழக்கு எண். சிசி.51/2017
வழக்கு சாட்சி எண். 9

| | |
|---|---|
| பெயர்: ரமேஷ் | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது வெள்ளூரில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன், அ.சா.8 எனது பெரியப்பா ஆவார். எனது பெரியப்பா மகன் பாண்டி என்பவர் சாலை விபத்தில் கடந்த 2016 ம் வருடம் ஒரு நாள் விபத்து நடந்ததாக சொன்னார்கள்.

2. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான் . 2 வது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ. 5** ஆகும். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. நான் பார்வை மகஜரில் Postmoderm செய்த இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்

குறுக்கு விசாரணை.

2. நான் கையெழுத்து போட்ட பார்வை மகஜரில் என்ன விபரம் எழுதப்பட்டு இருந்தது என்ற விபரம் எனக்குதெரியாது என்றால் சரிதான்.

என்னுடன் தான் பார்வைமகஜரில் அ.சா.8 கையெழுத்து செய்தார் என்றால் சரிதான்.

3. செய்துங்கநல்லூர் போலீசார் தான் என்னிடமும் தளவாய் என்பவரிடமும் Postmoderm செய்த இடத்தில் வைத்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /–
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.

தேதி: 07.02.2023

வாக்குமூலம்
குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்
வழக்கு எண். சிசி.51/2017
வழக்கு சாட்சி எண். 10

| | |
|---|---|
| பெயர்:ராமசுப்பு | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது வெள்ளூரில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன், எனது மகன் பெயர் ராமசாமி ஆகும். நான் விபத்து சமயத்தில் பாளையங்கோட்டை திம்ராஜாபுரத்தில் குடும்பத்துடன் வசித்து வந்தேன்.

2. எனது வயற்காடு வெள்ளூரில் உள்ளது. கடந்த 6 ஆண்டுகளக்கு முன்பாக எனது மகன் இருச்சக்கர வாகனத்தில் சென்ற போது விபத்து நடந்ததாக எனக்கு போலீசார் சொன்னார்கள். விபத்து புளியங்குளம் பேருந்து நிறுத்தம் அருகே நடந்தது.

3. எனது மகன் சென்ற இருச்சக்கர வாகனத்தின் மீது குட்டி யானை ஆல்டோ ஒன்று மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அந்த விபத்தின் காரணமாக எனது மகனுக்கு இடது கால் எலும்பு முறிவு ஏற்பட்டது. பின்பு காயம்பட்ட எனது மகனை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு

சிகிச்கைகாக கொண்டு சென்று அங்கு 10 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார்.

4. சம்பவத்தின் போது பாண்டி என்பவர் இருச்சகக்கர வாகனத்தை ஓட்டி சென்ற போது இருச்சக்கர வாகனத்திற்கு பின்னால் எனது மகன் அமர்ந்த போது விபத்து நடந்தது.

5. விபத்தின் காரணமாக பாண்டி என்பவர் சம்பவ இடத்திலேயே இறந்து போய்விட்டார். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.

6. போலீசார் சொல்லி தான் எனது மகனுக்கு விபத்து நடந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வேறு யாரும் என்னிடம் எனது மகனுக்கு விபத்து நடந்த விபரத்தை கூறவில்லை என்றால் சரிதான்.

7. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் காயம் அடைந்தது எனது மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /–
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.